# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 | தை 25 | வெள்ளிக்கிழமை | 07.02.2025 | கதிர் 120







# மார்ச் 14, 15 இல் கச்சதீவு திருவிழா



## முன்னேற்பாடுகள் மும்முரம்

யாழ்ப்பாணம், பெப். 7

கச்சதீவு திருவிழா எதிர்வரும் மார்ச் மாதம் 14ஆம் மற்றும் 15ஆம் திகதிகளில் இடம்பெறும் எனவும், திருவிழாவுக்கான முன்னாயத்தப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் யாழ்ப்பாணம் மாவட்ட செயலர் மருதலிங்கம் பிரதீபன் தெரிவித்தார்.

கச்சதீவு திருவிழா தொடர்பான முன்னாயத்தக் கூட்டம் இன்று வெள்ளிக்கிழமை மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

யாழ். மாவட்ட செயலர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் அதிகாரி நாகராஜா, முப்படைகளின் அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

கலந்துரையாடலின் பின்னர் மாவட்ட செயலர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போது,

"திருவிழாவுக்கான அனைத்து ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்படவுள்ளன. குறிப்பாக குடிதண்ணீர், மலசலகூடம், சுகாதார வசதிகள், பஸ் சேவைகள் 7 ➤

# ரஷ்ய இராணுவத்தில் சேர்ந்த இலங்கையர்களில் 59 பேர் பலி

## வெளிவிவகார அமைச்சர் தகவல்

**கொழும்பு, பெப். 7**

**ரஷ்ய இராணுவத்தில் இணைந்த இலங்கையர்களில் 59 பேர் உயிரிழந்துள்ளனர் என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் நாடாளுமன்றத்தில் இன்று தெரிவித்தார்.**

**2025 ஜனவரி 20ஆம் திகதி வரையான தகவல்களை அடிப்படையாகக் கொண்டே அமைச்சர் மேற்படி தகவலை வெளியிட்டார்.** 7 ➤



## மொட்டுக் கட்சி சஜித் அணிக்கு எந்தவிதத்திலும் சவால் இல்லை

### ரஞ்சித் மத்தும பண்டார தெரிவிப்பு



கொழும்பு, பெப். 7

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தமது அணிக்குச் சவால் கிடையாது எனவும், கூட்டணி அமைப்பது தொடர்பில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் மாத்திரமே தற்போது பேச்சு நடத்தப்பட்டு வருகின்றது எனவும் ஐக்கிய மக்கள் 7 ➤

## கொழும்பில் பஸ் மோதி யாசகர் ஒருவர் மரணம்



கொழும்பு, பெப். 7

கொழும்பு - கோட்டை யோர்க் வீதியில் பாணந்துறை - கொழும்பு பயணிக்கும் பஸ் ஒன்று யாசகர் ஒருவரை மோதியதில் அவர் உயிரிழந்துள்ளார்.

மேற்படி யாசகர் அந்த வீதியால் பயணித்துக் 7 ➤

## யாழ். மாவட்டத்தில் ஆலயங்களில் அதிக ஒலி எழுப்பப்பட்டால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

### மாவட்ட செயலர் பிரதீபன் எச்சரிக்கை



யாழ்ப்பாணம், பெப். 7

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் அதிக சத்தங்களுடன் ஒலிபெருக்கிகளை ஒலிக்க விடும் ஆலயங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என்று மாவட்ட செயலர் ம.பிரதீபன் தெரிவித்தார்.

மாவட்ட செயலகத்தில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்ற சுற்றாடல் 7 ➤

## கம்பஹாவில் ஒருவர் சுட்டுக்கொலை

கம்பஹா, பெப். 7

கம்பஹா, மினுவாங்கொடை பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றுக்கு அருகில் இன்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

35 வயதுடைய குடும்பஸ்தரே 7 ➤



# சண்டித்தனத்தால் என்னை வெல்ல முடியாது சந்திரசேகரனுக்கு அர்ச்சுனா எச்சரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 07

யாழ் மக்கள் தவறுதலாக தேசிய மக்கள் சக்தியின் மூன்று கத்தரித் தோட்ட வெருளிகளை யாழ்ப்பாணத்தில் தெரிவு செய்துவிட்டார்கள் இந்த மூன்று கத்தரித் தோட்ட வெருளிகளினால் யாழ்ப்பாணத்தில் ஏதாவது நடந்திருக்கின்றதா என்றால் இல்லை.

யாழ்ப்பாணத்தில் பிறக்காத அமைச்சர் சந்திரசேகர் தான் சண்டித்தனம் செய்து என்னை ஏதாவது செய்யலாமா என்று சிந்திக்கலாம் 44 ஆயிரம் போராளிகள் உயிர் கொடுத்த எங்களின் தேசியத்தலைவரின் வழியில் நின்ற என்னை அச்சுறுத்தலாம் என நினைப்பது மிகவும் நகைச்சுவையானது என யாழ் மாவட்ட சுயேட்சை உறுப்பினர் இராமநாதன் அச்சுனா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற புலமைச் சொத்துச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் உரையாற்றியதாவது, நான் உரையாற்றும் போது அமைச்சர் சந்திரசேகர் சபையில் இருப்பார் என நினைத்தேன். அவருக்கு தெளிவாக ஒன்றை சொல் கின்றேன். நான் யாழ்ப்பாணத்தில் பிறந்தவன்.




தேசியத் தலைவன் பிரபாகரன் பிறந்த வல்வெட்டித்துறையை பார்த்து வளர்ந்தவன். நாங்கள் சர்க்கஸ் கூடாரம் வைத்தாலும் அங்கு கழுதைகள், குதிரைகள் வந்த நின்றாலும் அவற்றுடன் சேர்ந்து படம் எடுப்பதற்கும் தயாராகத்தான் இருக்கின்றோம். ஆனால் அவ்வாறான கழுதைகளை எங்களின் தலைவராக ஏற்றுகொள்ள யாழ் மண்ணில் பிறந்த எந்த தமிழரும் தயாரில்லை. யாழ்ப்பாணத்தில் பிறக்காத அமைச்சர் சந்திரசேகர் சண்டித்தனம் செய்து என்னை ஏதாவது செய்யலாமா என யோசிக்கலாம்.

44 ஆயிரம் போராளிகள் உயிர் கொடுத்த எங்களின் தேசியத்தலைவரின் வழியில் நின்ற என்னை வெருட்டலாம், அச்சுறுத்தலாம் என நினைப்பது மிகவும் நகைச்சுவையானது. எமது இனத்தை காத்த ஆனந்த சுதாகரனின் விடுத லைக்காக இன்றுவரை போராடிக் கொண்டிருக்கின்றோம்.

அவரின் குழந்தைக்காக போராடிக் கொண்டிருக்கின்றோம். ஆனால் இந்த அரசு கூட அவரை விடுதலை செய்யவில்லை. முள்ளிவாய்க்காலில் கொத்துக் கொத்தாக படுகொலை செய்த இராணுவத்தை பாதுகாக்கும் நிலைமிக்குத்தான் தேசிய மக்கள் சக்தி அரசு போயுள்ளது. படுகொலைகளுக்கான எந்த பொறுப்புக் கூறல்களும் இல்லை.

யாழ்ப்பாணத்தில் 3000 வேலையில்லாத பட்டதாரிகள் இருக்கின்றார்கள். அவர்களுக்க உங்களினால் ஏதாவது ஒரு நடவடிக்கை எடுக்க முடியுமா? எமது மக்கள் தவறுதலாக இந்த அரசின் 3 கத்தரித்தோட்ட வெருளிகளை தேர்வு செய்துவிட்டார்கள் இந்த 3 கத்தரித்தோட்ட வெருளிகளினால் யாழ்ப்பாணத்தில் ஏதாவது நடந்திருக்கின்றதா என்றால் இல்லை.

மனம் போன போக்கில் இவர்கள் உள்ளார்கள். கடற்புலி படை, நிலப் படை,கரும் புலிப்படை, வான்படை என வைத்திருந்ததுதான் எமது தமிழீழம் .

எமது தேசியத்தலைவர் பிறந்த வல்வெட்டித்துறைக்கும் எனக்கு உங்களிலும் விட அதி கூடிய வாக்குகளை வழங்கிய சாவகச்சேரிக்கும் ஜனாதிபதி போய் சர்க்கஸ் கூடாரத்தில் நின்று ஆடுவதற்கான தேவையை யாழ் மண் உங்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

யாழ்ப்பாணத்தில் பாதையோர வியாபாரிகள், பஸ் நிலையம் என பிரச்சினைகள் ஆரம்பிக்கின்றீர்கள். நான் உங்களுக்கு ஆதரவாக இருந்தவன்.

ஆனால் ஒருங்கிணைப்புக்குழு கட்டத்தில் என்னை பங்கேற்க விடக்கூடாது என்பதற்காக 23 ஆம் திகதி நடந்த சம்பவத்திற்காக 29 ஆம் திகதி கைது செய்தீர்கள். முடிந்தால் அமைச்சர் சந்திரசேகரை வரச் சொல்லுங்கள் என்றார. (ஐ).

## வயோதிபப் பெண்ணிடம் பணம் கொள்ளை

வட்டுக்கோட்டை, பெப். 07

யாழ்ப்பாணம் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மாவடி பகுதியில் தனியாக வசித்து வரும் வயோதிபப் பெண் ஒருவரின் 50 ஆயிரம் ரூபா பணம் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

மோட்டார் சைக்கிளில் வந்த ஒருவர் குறித்த வீட்டுக்கு சென்று, தான் கமநலசேவை திணைக்களத்தில் இருந்து வருவதாகவும், விவசாய அழிவுக்கு நட்ட ஈடாக குறித்த பெண்ணுக்கு 2 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், அந்த பணத்தை பெறுவதற்கு 50 ஆயிரம் ரூபா செலுத்த வேண்டும் எனவும் கூறியுள்ளார்.

இந்நிலையில் உண்மையறியாத அந்த வயோதிபப் பெண் 50 ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளார். தான் ஏமாற்றப்பட்ட விடயம் பின்னர் தெரியவந்த நிலையில் இது குறித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

குறித்த சந்தேகநபரை கைது செய்வதற்கான நடவடிக்கைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற் கொண்டு வருகின்றனர். (ஐ)

## அமைச்சரை சாடிய சாணக்கியன் எம்பி

*மட்டக்களப்பு , பெப். 07*

*மட்டக்களப்பு மாவட்டத்திற்கான குடிநீர்வழங்கல்தொடர்பாக கடந்த 10 வருடங்களாக வழங்கப்பட்ட பதிலையே அமைச்சர் தெரிவித்துள்ளதாக நாடாளுமன்றஉறுப்பினர்இராசமாணிக்கம் சாணக்கியன் (ளுாயயெமலையெ சுயளயஅயமெைமயஅ) தெரிவித்துள்ளார்.*

*நாடாளுமன்றத்தில் இன்று உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்*

*அத்துடன் இந்த பதிலை அமைச்சின் அதிகாரிகள் எழுதிக் கொடுத்ததை வாசித்ததாகவும் அவருக்கு குறித்த விடயம் தொடர்பில்போதிய அறிவுஇல்லை என்றும் குற்றஞ்சாட்டியுள்ளார்*

*மட்டக்களப்பு போரதீவு பற்று பிரதேசத்தில் மட்டும் மட்டுமின்றி மட்டக்களப்பிலுள்ள சகல பிரதேசங்களிலும் குடிநீர் பிரச்சினை காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்*

*அத்துடன் ஜீவன் தொண்டமான் அமைச்சராக இருந்த காலத்தில் அம்பாந்தோட்டையிலிருந்து 40முஆ தூரத்திற்கு குடிநீர் விநியோக குழாய் வழங்கப்பட்ட நிலையில் பிள்ளையான் அதை தடுத்து நிறுத்தியதாகவும் குற்றஞ்சாட்டியுள்ளார்*

*இதன் போது குறுக்கிட்ட அரச தரப்பு எம்.பி " சாணக்கியன் கேட்ட முதல் கேள்விக்கான பதிலை நான் வழங்கியிருந்தேன். இரண்டாவதாக கேட்ட கேள்விக்கான பதிலை இன்று நாடாளுமன்றத்தில்வழங்குவேன். அதை அவர் சரியாக செவிமடுத்திருந்தால் அவருக்கு பதில் கிடைத்திருக்கும் என தெரிவித்திருந்தார்.*

*இந்த நிலையில் இதற்கு பதிலளித்த சாணக்கியன் "அரசாங்கத்திடம் தற்போது உள்ள குடிநீர் வழங்கல் குழாய்கள் மூலம் எத்தணை கிலோ மீற்றர் தூரத்திற்கு நீர் விநியோகிக்க முடியும் என கேள்வியெழுப்பியுள்ளார். (ஐ)*

## யாழ்.பல்கலை நிர்வாகத்தை சாடிய தென்னிலங்கை அரசியல்வாதி

கொழும்பு, பெப். 07

கடந்த சுதந்திர தினத்தின்போது யாழ். பல்கலைக்கழகத்தில் பிரதான கம்பத்தில் தொங்கவிடப்பட்டிருந்த தேசியக் கொடியை கீழே இறக்கி அதற்கு பதிலாக அங்கு கறுப்புக் கொடியை ஏற்றியமை தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகம் பொறுப்புக்கூற வேண்டும். வக்கிர குணம் உள்ளவர்களால் மாத்திரமே இவ்வாறு நடந்துகொள்ள முடியும் என பொதுஜன பெரமுனவின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,"அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி, தெற்கில் இனவாதத்தை தூண்டுபவர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுப்பதாக தெரிவித்திருந்தார்.

அவ்வாறாயின் சுதந்திர தினத்தை நாட்டின் அனைத்து மக்களும் கொண்டாடிக்கொண்டிருக்கும் நேரத்தில் வடக்கில் மாத்திரம் தேசிய கொடியை இறக்கிவிட்டு, கறுப்புக்கொடி ஏற்றுவது என்பது தெற்கில் உள்ள மக்களின் உணர்வை தூண்டுவதாக அமையும்.

இவ்வாறு கறுப்புக்கொடி ஏற்றுவது, நாட்டுக்கு ஏற்படும் அவமரியாதை மாத்திரமல்ல. ஆங்கிலேயர்களிடமிருந்து நாட்டை மீட்பதற்காகவும் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வருவதற்காகவும் போராடிய இராணுவ வீரர்களுக்கு செய்யும் அகௌரவமாகும்.

இதற்கு அனுமதி அளித்தமை தொடர்பில் யாழ். பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் மற்றும் அதன் நிர்வாகம் பொறுப்புக்கூற வேண்டும். விடயத்துடன்தொடர்புடையவர்கள் உடனடியாக கைது செய்யப்பட வேண்டும்.

யாழ். பல்கலைக்கழகம் ஏனைய பல்கலைக்கழகங்களை போன்று இந்த நாட்டு மக்களின் வரிப்பணத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது.

எனவே இவ்வாறு நடந்துகொண்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்." என கோரிக்கை விடுத்துள்ளார். (ஐ)

## தையிட்டி விகாரை காணியை விடுவிக்க மாட்டோம்

தையிட்டி , பெப். 07

யாழ்ப்பாணம் - தையிட்டி விகாரை அமைந்துள்ள காணி மற்றும் அதனைச் சூழவுள்ள 14 ஏக்கர் காணியும் விகாரைக்கு சொந்தமானது என்றும் அதனை யாருக்கும் கையளிக்க முடியாது எனவும் அகில இலங்கை பௌத்த மகா சம்மேளனம் தெரிவித்துள்ளது. குறித்த விடயம் தொடர்பில் அந்த சம்மேளனம் யாழ்ப்பாண மாவட்ட செயலாளருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, "கடந்த வருடம் டிசம்பர் மாதம் 13ஆம் திகதி நடைபெற்ற யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில், தையிட்டி விகாரை அமையப்பெற்றுள்ள காணியை பொது மக்களுக்குக் கையளிக்க இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

குறித்த கூட்டத்திற்கு, விகாரைக்கு பொறுப்பான விகாராதிபதியையோ அல்லது விகாரை நிர்வாகத்தினரையோ அழைத்திருக்கவில்லை. இதன் காரணமாக அந்த இணக்கப்பாட்டை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது.

விகாரை அமையப்பெற்றுள்ள 7 ஏக்கர் காணி, அதனைச் சூழவுள்ள காணி என 14 ஏக்கர் காணியையும் விகாரைக்கு கையளிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மாறாக விகாரைக்கு சொந்தமான காணிகளை பொது மக்களுக்கு வழங்க முடியாது.

விகாரைக்கு உரிய காணியில், சைத்யம், புத்த மெதுரா, அன்னதான மடம், மடாலயம், ஓய்வு மண்டபம், தியான மண்டபங்கள், பூங்கா போன்றவை அமைக்கப்பட வேண்டும்.

எனவே அதற்குரிய நடவடிக்கைகளை விரைந்து எடுக்க வேண்டும் என குறித்த கடிதத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

# திருட்டு வாகனம் சிக்கியதால் முன்னாள் எம்.பி தப்பியோட்டம்

கொழும்பு, பெப். 07

சட்டவிரோதமாக ஒன்று சேர்க்கப்பட்ட பிராடோ ஜீப் வண்டி, பாகங்களாக பிரிக்கப்பட்டு மறைத்து வைக்கப்பட்ட நிலையில், சட்டவிரோத சொத்துக்கள் விசாரணை பிரிவினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைபற்றப்பட்ட வாகனம் புத்தளம் மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த அபேசேகரவால் பயன்படுத்தப்பட்டதாக கூறப்படுகிறது.

சம்பவத்தை அடுத்து முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அப்பகுதியில் இருந்து தப்பிச் சென்றுள்ளதால், சம்பந்தப்பட்ட வாகனம் தொடர்பாக வாக்குமூலம் பெற விசாரணை அதிகாரிகளால் முடியவில்லை.

சம்பவம் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாந்த அபேசேகரவும் அவரது மகனும் இணைந்து இந்த வாகனத்தை பாகங்களாக பிரித்து மறைத்து வைத்திருந்தது தெரியவந்துள்ளது. (ஐ)



# நடுவீதியில் பற்றியெரிந்த மோட்டர் சைக்கிள்

கொழும்பு, பெப். 07

வவுனியாவில் ஏ9 வீதியில் பயணித்த மோட்டர் சைக்கிள் ஒன்று திடீரென தீப்பற்றி எரிந்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது. வியாழக்கிழமை இரவு இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா நகரில் இருந்து சென்ற மோட்டர் சைக்கிள் ஒன்று வவுனியா மகா வித்தியாலயத்தை அண்மித்து நிறுத்திவிட்டு, மீண்டும் புறப்பட தயாரான போது திடீரென தீப்பற்றி எரிந்துள்ளது.

தீயை கட்டுப்படுத்த மோட்டர் சைக்கிள் சாரதி மற்றும் வீதியால் சென்றோர் முயன்ற போதும் மோட்டர் சைக்கிள் பகுதியளவில் எரிந்து நாசமாகிய பின் தீ கட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. (ஐ)

# வெளிநாட்டு அழகிகள் தொடர்பில் வெளியான தகவல்

கொழும்பு, பெப். 07

கொழும்பு, கொள்ளுப்பிட்டியில் உள்ள மிராக்கிள் சிட்டி தங்கும் விடுதியின் அறையில் இரண்டு பிரிட்டன் மற்றும் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்த இளம் பெண்கள் சமீபத்தில் உயிரிழந்தனர்.

அவர்கள் பூச்சிகளைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்திய பூச்சிக்கொல்லி மருந்து பாதிப்பால் இறந்திருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. டெர்பியில் இருந்து வந்த 24 வயதான எபனி மகின்டோஷ் என்ற பெண் சமூக ஊடகங்களில் செல்வாக்கு மிக்க பிரபலமான நபர் என்று இப்போது கூறப்படுகிறது.

தெற்காசியாவில் சுற்றுப்பயணம் செய்யும் கனவில் இருந்ததாகவும், அதை நனவாக்க கடந்த ஜனவரி 28 ஆம் திகதி முதலில் இலங்கைக்கு வந்ததாகவும் அவரது தங்கை தனக்காக எழுதி வைத்துள்ள குறிப்பில் தெரிவித்துள்ளார்.

இருப்பினும், அவரது பயணத்தின் நான்காவது நாளில், அதாவது பிப்ரவரி 1 சனிக்கிழமை, அவரும் மேலும் சில தங்குபவர்களும் வாந்தி, குமட்டல் மற்றும் மூச்சுத் திணறல் காரணமாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மிராக்கிள் கொழும்பு சிட்டியில் தங்கியிருந்த எபனி மற்றும் பெயரிடப்படாத ஜெர்மன் பெண் இருவரும் ஒரே அறையில் தங்கியிருந்தனர்.

அவர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட சில மணி நேரங்களுக்குப் பிறகு உயிரிழந்தனர். பிரேத பரிசோதனை அறிக்கை இன்னும் வெளியிடப்படவில்லை.

ஆனால் ஊடக அறிக்கைகளின்படி, இந்த மரணங்களுக்கு 72 மணி நேரத்திற்கு முன்பு அருகிலுள்ள அறையில் பூச்சிகளைக் கட்டுப்படுத்தப் பயன்படுத்திய பூச்சிக்கொல்லி வாயு காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

எபனியின் சகோதரி இந்தியா, சமூக ஊடகங்கள் மூலம் தனது சகோதரிக்கு கண்ணியமான பிரியாவிடை அளித்து, “எனது எபனி, எனது அழகான சகோதரி, எனக்கு ஒரு பெரிய சகோதரியாக இருந்ததற்கு நன்றி. நீங்கள் எனக்கு கிடைக்கக்கூடிய சிறந்த சகோதரி” என்று குறிப்பிட்டுள்ளார்.

இன்ஸ்டாகிராமில் 10,000க்கும் அதிகமான பின்தொடர்பவர்களைக் கொண்ட எபனி, தொடர்ந்து ஃபேஷன் மற்றும் பயண அனுபவங்களைப் பற்றிய பதிவுகளை வெளியிட்டார்.

இந்தியா தனது குடும்ப உறுப்பினர்களுக்கு இலங்கை வந்து அவரது உடலை மீண்டும் கொண்டு செல்ல உதவுவதற்காக GoFundMe நிதி திரட்டும் பிரச்சாரத்தையும் தொடங்கியுள்ளார்.

இதுவரை 22,000 பவுண்டுகள் இலக்கில் 20,000 பவுண்டுகளுக்கு மேல் திரட்டப்பட்டுள்ளது. நிதி திரட்டும் பக்கத்தில் இந்தியா இவ்வாறு எழுதியுள்ளார்: “ஜனவரி 28, செவ்வாயன்று, எபனி ஹீத்ரோ விமான நிலையத்திலிருந்து தெற்காசியா முழு வதும் பயணம் செய்யும் தனது கனவை நனவாக்கப் புறப்பட்டார்.

அவர் வழக்கமாகச் செய்வது போல், பல மாதங்களாக ஆராய்ச்சி செய்து, திட்டமிட்டு, வரும் மாதங்களுக்கான அட்டவணைகளைத் தயாரித்திருந்தார். ” இலங்கை அதிகாரிகள் முழுமையான பிரேத பரிசோதனை முடியும் வரை எபனியின் உடலை விடுவிக்க முடியாது என்றும், அவரது மரணம் தொடர்பான உண்மைகள் குறித்து விசாரணை நடந்து வருவதாகவும் அவர் கூறுகிறார்.

நாங்கள் விரைவில் எங்கள் அழகான எபனியுடன் இருக்க விரும்புகிறோம். வெளிநாட்டில் தனியாக இருப்பது பற்றி நினைக்கும்போது நாங்கள் வேதனைப்படுகிறோம். நாங்கள் அவளைப் பத்திரமாக வீட்டிற்கு கொண்டு வர வேண்டும். நாங்கள் எங்கள் தேவதூதரைப் பாதுகாக்க வேண்டும்,” என்று அவர் கூறுகிறார்.

இந்த சம்பவம் தொடர்பாக விசாரணைகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. பிரேத பரிசோதனை அறிக்கை மரணத்திற்கான காரணத்தை உறுதி செய்யும் எனவும் கூறப்படுகின்றது.

இந்நிலையில் இலங்கைக்கு சுற்றுலா வந்த யுவதிகள் மரணம்டைந்த சம்பவம் அதிர்ச்சியையும், சோகத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

(ஐ)

# குப்பைகளை கொட்டியவர்களை வைத்தே சுத்தம் செய்த நீதிமன்றம்




கொழும்பு, பெப். 07

ஹட்டன் நகரில் உள்ள மீன் கடை கழிவுகளை பழைய ஹட்டன்-கொழும்பு பிரதான சாலையில் உள்ள கால்வாயில் கொட்டிய லொரி டிரைவரும், உதவியாளரையும் மீண்டும் கோட்டிய குப்பைகளை அவர்களே சுத்தம் செய்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

ஹட்டன் நகரில் உள்ள மீன் கடை கழிவுகளை பழைய ஹட்டன்-கொழும்பு பிரதான சாலையில் உள்ள கால்வாயில் லொரி டிரைவரும், உதவியாளரும் கொட்டியுள்ளனர்.

இதனையடுத்து லொரி டிரைவரும், உதவியாளரும் ஹட்டன் பொலிஸ் அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு ஹட்டன் நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

சந்தேக நபர்கள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட இரண்டு சந்தேக நபர்களும் நீதிமன்றத்தில் குற்றத்தை ஒப்புக்கொண்டதால், இரண்டு குற்றவாளிகளையும் 06ம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதவான் உத்தரவிட்டார்.

அத்துடன் ஹட்டன்-டிக்கோயா நகர சபையின் பொது சுகாதார பரிசோதகரின் மேற்பார்வையில், குற்றவாளிகள் கழிவுகளை கொட்டிய இடத்தை அவர்களே சுத்தம் செய்ய வேண்டும் என்றும் ஹட்டன் நீதவான் எம். ஃபரூக் டின் உத்தரவிட்டார்.

குற்றவாளிகள் கழிவுகளை ஏற்றிச் சென்ற லொரியை பிணையில் விடுவிக்கவும் நீதவான் உத்தரவிட்டார்.

க்ளீன் ஸ்ரீ லங்கா திட்டம் அன்று ஹட்டன் நகரில் நடைபெற்றபோது, குற்றவாளிகள் இருவரும் லொரியில் இருந்து மீன் கழிவுகளை எடுத்துச் சென்று கொட்டிக் கொண்டிருந்த போது வட்டவளை பொலிஸ் அதிகாரிகள் சந்தேக நபர்களைக் கைது செய்து ஹட்டன் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

அதேவேளை ஹட்டன்-டிக்கோயா நகர சபை எல்லைக்குள் இது போன்ற கழிவுகளை முறையற்ற வகையில் கொட்டுபவர்களையும், வெற்றிலை துப்புபவர்களையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு ஹட்டன் பிரிவு பொறுப்பு பொலிஸ் அதிகாரி அறிவுறுத்தியுள்ளார்.

இலங்கை ஜனாதிபதி அனுரகுமாரவின் ஆலோசனையின் பேரில் நாடளாவிய ரீதியில் க்ளீன் ஸ்ரீ லங்கா திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



# உச்சம தொட்ட பச்சை மிளகாய் விலை

கொழும்பு, பெப். 07

கறி மிளகாய் மற்றும் பச்சை மிளகாய் ஆகியவற்றின் விலை கிலோ ரூபா1,400 ஆக உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தம்புள்ளை மற்றும் கெப்பட்டிபொல பொருளாதார மத்திய நிலையங்களில் பச்சை மிளகாய் நேற்று ஒரு கிலோ ரூபா 1,000 ரூபா முதல் 1,100 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டுள்ளது.

கடந்த சில மாதங்களாக கறி மிளகாய் விலை தொடர்ந்து அதிகரித்து வந்ததாலும், மழைக்காலத்துடன் பச்சை மிளகாய் விலையும் அதிகரித்துள்ளது.

எனினும், பொருளாதார மத்திய நிலையங்களுக்கு குறைந்த அளவே மிளகாய் விநியோகிக்கப்படுவதால் விலையேற்றம் அதிகரித்துள்ளதாக சந்தை தகவல்கள் தெரிவிக்கின்றன.

கறி மிளகாய் மற்றும் பச்சை மிளகாய் தவிர ஏனைய காய்கறிகளின் விலைகளும் அதிகரித்துள்ளன.

சமீபத்தில், கரட் கிலோ ரூ.40 முதல் ரூ.50 வரை குறைக்கப்பட்டது, தற்போது கரட்டின் மொத்த விலை கிலோ ரூ.400 ஆக உயர்ந்துள்ளது.

எதிர்வரும் நாட்களில் மரக்கறிகளின் விலை மேலும் அதிகரிக்கும் என பொருளாதார மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (ஐ)



# காஷ்மீரில் பாகிஸ்தான் ஊடுருவல்காரர்கள் 7 பேர் சுட்டுக்கொலை பாதுகாப்பு படை அதிரடி

ஜம்மு காஷ்மீர் மாநிலம் பூஞ்ச் மாவட்டத்தில் பாகிஸ்தான் ஊடுருவல்காரர்கள் பதுங்கி இருந் துள்ளனர். இதையடுத்து,

பாதுகாப்பு படையினர் துப்பாக்கிச்சூடு நடத்தி னர். இதில் பாகிஸ்தான் ராணுவ வீரர்கள் உட்பட 7 ஊடுருவல்காரர்கள் கொல்லப்படடனர்.

இவர்கள் பயங்கரவாதிகள் அல்பதர் குழுவை சேர்ந்தவர்களாக இருக்கலாம் என பாதுகாப்பு படை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பாகிஸ்தானின் மிகப்பெரிய சதி செயல் முறியடிக்கப்பட்டது. பெப்ரவரி 4,5ம் தேதிகளில் பாகிஸ்தான் ஊடுருவல்காரர்கள் பதுங்கி இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

பின்னர் பாது காப்பு படை வீரர்கள் தாக்குதல் நடத் தினர். இதில் ஊடுருவல்காரர்கள் 7 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர் என பாதுகாப்பு படை வட்டாரங்கள் தகவல் தெரிவிக்கின்றன.

சமீபத்திய மாதங்களில், ஜம்மு காஷ்மீரில் பல்வேறு இடங்களில் நடந்த பயங்கரவாத தாக்குதல் சம்பவங்களில் பாதுகாப்புப் படையினர் உட்பட 44 பேர் கொல்லப்பட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

# பாலியல் அத்துமீறலில் ஈடுபடும் ஆசியர்களின் கல்வித்தகுதி ரத்து!



பாலியல் விவகாரம் தொடர்பாக பள்ளிகளில் இனி புகார்கள் எழுந்தால், யார் தவறு செய்திருந்தாலும் அவர்களின் கல்வித்தகுதி ரத்து செய்யப்படும் என பள்ளிக் கல்வி துறை அமைச்சர் மகேஷ் தெரிவித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக தமிழகத்தில் பள்ளி குழந்தைகளுக்கு பாலியல் தொல்லை கொடுக்கும் சம்பவம் நடந்து வருகிறது. கிருஷ்ணகிரி அரசுப் பள்ளி மாணவி, மூன்று ஆசிரியர்களால் பாலியல் வன் கொடுமை அளிக்கப்பட்டது தெரியவந்தது. மணப்பாறையில் நான்காம் வகுப்பு மாணவிக்குப் பாலியல் தொல்லை கொடுத்த தனியார் பள்ளி நிர்வாகிகள் உட்பட 4 பேர் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், பாலியல் அத்துமீறலில் ஈடுபடும் ஆசியர்களின் கல்வி தகுதி ரத்து செய்யப்படும் என அதிரடி உத்தரவு பிறப்பிக்கப்பட்டு உள்ளது. இது குறித்து பள்ளிக்கல்வி துறை அமைச்சர் மகேஷ் கூறியிருப்பதாவது: பாலியல் வன்கொடுமை குற்றச்சாட்டு, நிரூபிக்கப்பட்டால் யார் தவறு செய்திருந்தாலும் அவர்களின் கல்விச் சான்றிதழ்கள் ரத்து செய்யப்படும். பாலியல் தொல்லை குறித்து மாணவிகள் புகார் அளிக்க புதிய திட்டம் கொண்டுவரப்படும். பாலியல் அத்துமீறலில் ஈடுபடும் ஆசிரியர்களுக்கு போலீசார் மூலம் கடும் தண்டனை பெற்றுத்தரப்படும்.

தமிழகத்தில் நடந்து வரும் பாலியல் குற்றங்கள் நடக்காமல் தடுப்பதற்கு சட்டசபையில் முதல்வர் ஸ்டாலின் புதிய சட்டத்திருத்தத்தை கொண்டு வந்தார். இரும்புகரம் கொண்டு ஒடுக்குவதற்கு கட்டாயம் தண்டனை வழங்கப்படும் என்றும் முதல்வர் ஸ்டாலின் கூறியுள்ளார். வருங்காலத்தில் இது போல் சம்பவங்கள் நடக்காமல் இருக்க பள்ளிக்கல்வி துறை மற்றும் போலீசார் இணைந்து நடவடிக்கை எடுப்போம். இவ்வாறு அவர் கூறினார்.



# மக்கள் தொகையை விட வாக்காளர்கள் அதிகரித்தது எப்படி?

புதுடில்லி: மஹாராஷ்டிராவில் மக்கள் தொகையை விட வாக்காளர்கள் அதிகரித்தது எப்படி? என தேர்தல் கமிஷனுக்கு ராகுல் கேள்வி எழுப்பி உள்ளார்.

டில்லியில் நிருபர்கள் சந்திப்பில் ராகுல் கூறியதாவது: மஹாராஷ்டிரா அரசின் தரவுப்படி, மாநிலத்தில் 9.54 கோடி மக்கள் வசிக்கிறார்கள். மக்கள் தொகையை விட வாக்காளர்கள் அதிகரித்தது எப்படி?

லோக்சபா தேர்தலுக்குப்பிறகு, மஹாராஷ்டிராவில் 39 லட்சம் வாக்காளர்கள் ஏன் சேர்க்கப்பட்டனர்? வாக்காளர் பட்டியலில் வெளிப்படைத்தன்மை இருக்க வேண்டும்.

உண்மையான வாக்காளர்களை விட அதிகமான வாக்காளர்கள் உள்ளனர்? இந்த வாக்காளர்கள் எங்கிருந்து வந்தார்கள்? எங்களுக்கு வாக்காளர் பட்டியல் தேவை. புதிய வாக்காளர்கள் யார் என்பதை நாங்கள் அறிந்து கொள்ள விரும்புகிறோம். இது குறித்து தேர்தல் கமிஷன் எந்த பதிலும் அளிக்கவில்லை. இவ்வாறு ராகுல் கூறினார். ராகுலின் குற்றச்சாட்டை மஹா., முதல்வர் தேவேந்திர பட்னவிஸ் நிராகரித்தார்.

இது குறித்து அவர் கூறியிருப்பதாவது: தேர்தல் கமிஷன் ஏற்கனவே திட்டவட்டமாக பதிலளித்துள்ளது. ராகுல் தொடர்ந்து பொய்களை கூறி, தன்னை ஆறுதல் படுத்திக் கொள்கிறார். இது தொடர்ந்தால், காங்கிரஸ் மீண்டும் உயிர் பெற வாய்ப்பில்லை. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# கேள்வி கேட்டால் உங்களுக்கு கோபம் வருகிறதா?

## தி.மு.க. மீது அண்ணாமலை பாய்ச்சல்



'கடன்களை தள்ளுபடி செய்வோம் என்று பொய்யான வாக்குறுதி கொடுத்து விட்டு, ஆட்சிக்கு வந்த பின்னர் கண்துடைப்புக்காக சிறிய அளவில் தள்ளுபடி செய்து மக்களை ஏமாற்றுவதைக் கேள்வி கேட்டால், உங்களுக்கு கோபம் வேறு வருகிறதா?' என்று பா.ஜ., மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் பயிர்க் கடன் தள்ளுபடி என்ற தி.மு.க., தேர்தல் வாக்குறுதியை ஏன் நிறைவேற்றவில்லை என்று நாங்கள் நேற்று அறிக்கை வாயிலாக எழுப்பிய கேள்விக்கு, ஊர் உறங்கிய பின்னர், நள்ளிரவில் பதிலளித்திருக்கிறார் அமைச்சர் பெரியகருப்பன். தி.மு.க., ஆட்சியில் விடியாது என்பதில், அமைச்சருக்கு அத்தனை நம்பிக்கை.

விவசாயிகளுக்கு தி.மு.க., அளித்த வாக்குறுதிகள் என்னாச்சு: அண்ணாமலை கேள்வி

கடந்த 2021ம் ஆண்டு தி.மு.க., ஆட்சிக்கு வந்ததும், இதற்கு முந்தைய ஆட்சியில் அறிவிக்கப்பட்டிருந்த ரூ.12,110.74 கோடி கூட்டுறவு பயிர்க் கடனை தள்ளுபடி செய்தோம் என்று, கொஞ்சம் கூடக் கூசாமல் பொய்யைக் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார் அமைச்சர். தி.மு.க.,வில் அமைச்சராவதற்கு முதல் தகுதியே, பொய் சொல்லி மக்களை ஏமாற்றுவதுதான் என்பதை தனது அறிக்கை மூலம் மீண்டும் நிரூபித்திருக்கிறார்.

தமிழக அரசு வெளியிட்டுள்ள கொள்கைக் குறிப்பிலேயே, கடந்த 2021 - 2022 முதல் 2023 - 2024 வரை, தள்ளுபடி செய்யப்பட்ட கூட்டுறவு பயிர்க் கடன் ரூ.4,455.37 கோடி மற்றும் நிலுவையில் இருக்கும் கடனுக்கான வட்டித் தொகை ரூ.1,430.27 கோடி என்று கூறப்பட்டுள்ளது. இதை எப்படிக் கூட்டினாலும், அமைச்சர் கூறும் ரூ.12,110.74 கோடி வரவில்லை. நபார்டு வங்கி மறு நிதியை எல்லாம் கணக்கில் காட்டி சமாளிக்க முயன்று தோற்றிருக்கிறார் அமைச்சர். கணிதப் பாடத்தில், முதலமைச்சர் முதற்கொண்டு தி.மு.க.,வினர் எத்தனை திறமையானவர்கள் என்பதைத் தமிழக மக்கள் அறிவார்கள். அப்படி இருக்கையில், இப்படி ஒரு பொய் சொல்ல வெட்கமாக இல்லையா அமைச்சர் அவர்களே?

நான்கு ஆண்டுகால டிராமா மாடல் ஆட்சி யில், விவசாயிகளுக்குச் செய்த திட்டங்களாகப் பட்டியலிட்டிருக்கும் அமைச்சர், விவசாயிகள் மீது குண்டாஸ் வழக்கு, டங்ஸ்டன் திட்டத்தை எதிர்த்துப் போராடிய 11,000 விவசாயிகள் மீது வழக்கு போன்றவற்றையும் சேர்த்திருந்தால், அந்தப் பட்டியல் நிறைவு பெற்றிருக்கும். நகைக் கடன், கல்விக் கடன், பயிர்க் கடன் அனைத்தையும் தள்ளுபடி செய்வோம் என்று பொய்யான வாக்குறுதி கொடுத்து, பொதுமக்களைக் கடனாளியாக்கிவிட்டு, ஆட்சிக்கு வந்த பின்னர் கண்துடைப்புக்காக சிறிய அளவில் தள்ளுபடி செய்து மக்களை ஏமாற்றுவதைக் கேள்வி கேட்டால், உங்களுக்கு கோபம் வேறு வருகிறதா?, இவ்வாறு அவர் குறிப்பிட்டுள்ளார்.

# திருமணத்தின் பெயரில்



# பாலின சுரண்டல்!

திருமணக் கட்டமைப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கும் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் திருமணங்களுக்கான சட்டங்களும், நிபந்தனைகளும் அதிகம். அதுவும் குறிப்பாக சாதி, மத படிநிலைகளைக் கருத்தில் கொண்டு இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் திருமணங்களுக்கான சட்டங்களை வரையறுத்துள்ளது. ஆனால், இங்கு நடக்கும் திருமணங்களில் எழுதப்படாத சட்டமாக இருக்கும் சில ஒருதலைபட்சமான, நாம் கவனிக்க மறந்த அல்லது எளிமையாகக் கடந்து சென்ற நிகழ்வுகளைப் பற்றிய பல கோணப் பார்வையை முன்வைக்க வேண்டும்.

சமீபத்தில் நடந்த நடிகர் நெப்போலியன் மகன் திருமணத்திலும் சரி, இந்தச் சமூகம் திருமணம் மீது வைத்திருக்கும் ஒரு பொதுவான பார்வையை நம்மால் புரிந்து கொள்ள முடியும். “எங்களுக்குப் பின் உடல்நலம் சரியில்லாத என் மகனைப் கவனித்துக் கொள்வதற்காக அவனுக்குத் திருமணம் செய்து வைக்கத்தான் வேண்டும்” என்கிற பொதுவான கருத்தையோ சிந்தனையையோ இங்கு பெரும்பான்மையாகக் கொண்டிருப்பது ஆண்களின் பெற்றோரே. இதுவே ஒரு பெண் உடல் அல்லது மன வளர்ச்சிக் குறைபாடோடு இருந்தால் அந்தப் பெண்ணின் திருமணத்தை இந்தச் சமூகம் ஒரே மாதிரியாக அணுகுமா?

இதுபோன்ற திருமணங்களில் பொருளாதாரமும் ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. சரி நிகர் சமமான பொருளாதாரப் பின்னணியைக் கொண்ட ஒரு நபரை இது போன்ற திருமணங்களில் பங்கேற்க இச்சமூகமும் சரி குடும்பமும் சரி அனுமதிப்பதில்லை. வெளிநாடுகளில் நடக்கும் திருமணங்களுக்கும் உள்நாட்டில் நடக்கும் திருமணங்களுக்கும் எண்ணற்ற வித்தியாசங்கள் உண்டு. இங்குள்ள குடும்பச் சூழலும் சமூகப் பார்வையும்கூட மற்ற நாடுகளிலிருந்து வேறுப்பட்டதாகத்தான் இருக்கிறது. அந்த நபருக்கான மருத்துவச் சிகிச்சையில் தொடங்கி பராமரிப்பு வரை அத்தனையையும் குடும்பங்கள் பெண் மீது சுமத்தி, அவளைத் தியாகியாக்குகின்றன. ஆனால், அந்தப் பெண்ணின் பார்வையிலிருந்து திருமணத்தை அணுகுவதைப் பற்றி யாரும் யோசிப்பதுகூட இல்லை.

சமிபத்தில் நடந்த நடிகர் நெப்போலியன் மகன் திருமணத்திலும் சரி, இந்தச் சமூகம் திருமணம் மீது வைத்திருக்கும் ஒரு பொதுவான பார்வையை நம்மால் புரிந்து கொள்ள முடியும். “எங்களுக்குப் பின் உடல்நலம் சரியில்லாத என் மகனைப் கவனித்துக் கொள்வதற்காக அவனுக்குத் திருமணம் செய்து வைக்கத்தான் வேண்டும்” என்கிற பொதுவான கருத்தையோ சிந்தனையையோ இங்கு பெரும்பான்மையாகக் கொண்டிருப்பது ஆண்களின் பெற்றோரே. இதுவே ஒரு பெண் உடல் அல்லது மன வளர்ச்சிக் குறைபாடோடு இருந்தால் அந்தப் பெண்ணின் திருமணத்தை இந்தச் சமூகம் ஒரே மாதிரியாக அணுகுமா?



மனித உணர்வுகளின் பரிமாற்றம் தொடுகையில் வெளிப்படுகிறது என்பது மானுடவியலாளர்களின் கருத்து. ஆனால், ஒரு சில மரபணுக் குறைபாடுகள் கை, கால்களை முற்றிலுமாகச் செயலிழக்கச் செய்துவிடும். இந்நிலையில் அந்த நபரைத் திருமணம் செய்துகொள்ளும் ஆணோ பெண்ணோ மனிதனின் அடிப்படை தேவையான தொடுகையின் பற்றாக்குறையை வாழ்நாள் முழுவதும் சந்திக்க நேரிடும். இது போன்ற தனக்கான சில அடிப்படை தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்வதை முற்றிலும் துறந்து இணையரின் பராமரிப்பில் மட்டுமே முழுக் கவனம் செலுத்துவது இங்கு ஒருவிதமான சமநிலை குலைவை ஏற்படுத்துகிறது. இங்கு பெரும்பாலும் பாதிக்கப்படுவது பெண்கள்தான்.

உடல் மற்றும் மன நல பாதிப்பு எதுவாக இருந்தாலும் ஆணுக்கும் பெண்ணுக்கும் இருக்கும் ஒரு மிகப்பெரிய வித்தியாசம் இயக்கம். அதாவது ஓர் ஆண் ஆரோக்கியமாக இருந்தாலும், குறைபாடோடு இருந்தாலும், எப்படி இருந்தாலும், அவன் தன்னை ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்கு நகர்த்திக் கொள்கிறான். அதைக் குடும்பமும் சமூகமும் ஏற்றுக் கொள்கிறது. ஆனால், இதுவே பெண் தன்னை நகர்த்திக் கொள்வதைக் குடும்பமும் சரி, சமூகமும் சரி ஏற்றுக் கொள்வதில்லை. இந்தப் பெரும் வித்தியாசம்தான் திருமணத்திலும் அடிப்படையாக அமைகிறது.

ஆணின் நகர்வும், அவனின் குடும்பப் பின்புலமும் அவனுக்கான இணையை அமைத்துக் கொள்வதில் முக்கியப் பங்கு வகிக்கின்றன. இதுவே பாதிக்கப்பட்ட பெண்ணின் குடும்பம் அவளுக்கான ஓர் இணையைத் தேடுவதிலோ அல்லது அவளின் நகர்விலோ பெரும்பாலும் ஆர்வம் காட்டுவதில்லை. பெண்களைத் தியாகியாக்கியோ அல்லது அவளது பொருளாதாரத் தேவையைக் குத்திக்காட்டியோ எப்படியோ பாதிக்கப்பட்ட ஆணை அவள் திருமணம் செய்துக் கொள்வதை இச்சமூகம் ஆதரிக்கிறது. ஆனால், பாதிக்கப்பட்ட பெண்ணின் திருமணத்தை ஆதரிப்பதில்லை.

திருமணம் செய்துக் கொள்வதிலேயே இத்தனை ஏற்ற இறக்கங்கள் என்றால், திருமணத்திற்குப் பிறகு? உடல் அல்லது மனநலம் குறைபாடுடைய இணையருடனோ அல்லது குறைபாடுடைய அவர் குடும்பத்தினருடனோ வாழ்வது என்பது அத்தனை சிக்கலானது. இதில் பெரிதும் பாதிக்கப்படுவது பெண்கள்தான். 24 மணி நேரமும் தொடர் கண் காணிப்பிலும் பராமரிப்பிலும் இருக்க வேண்டிய ஒரு நபருடன் இருப்பது என்பது மனச்சோர்வை எளிதில் ஏற்படுத்தக் கூடியது. அம்மாவோ மனைவியோ தான் குடும்ப நலத்தைப் பேணிகாக்க வேண்டும் என்கிற பொதுப்புத்தியை இதுபோன்ற சூழலிலும் சமூகம் கடைப்பிடிக்கிறது. பாதிக்கப்பட்டது ஆணாக இருந்தாலும் சரி பெண்ணாக இருந்தாலும் சரி இரண்டிலும் பாதிப்பது என்னவோ பெண்களின் நகர்வும் இயக்கமும்தான். ஒரு கடைக்குப் போக வேண்டும் என்றால்கூட அவ்வளவு சுலபமாக நினைத்ததும் போய்விட முடியாத ஒரு முடக்கததைப் பெண்களுக்கு ஏற்படுத்துகிறது இதுபோன்ற திருமணங்கள்.

சரி, இதுவே ஒரு பாதிக்கப்பட்ட பெண்ணைத் திருமணம் செய்து கொண்ட ஆணை பற்றி யோசிப்போம். பிரியமானவளே படத்தின் இறுதியில் இடுப்பெலும்பு முறிந்த தன் மனைவியை எங்கு போனாலும் முதுகில் சுமந்து செல்லும் ஓர் ஆணை பற்றிய காட்சி வரும். அதைப் பார்த்ததும் பூரித்துப் புளகாங்கித்துப் போகும் நம்மில் நிறையப் பேர் அந்தக் காட்சியின் உண்மைத்தன்மையை மறந்து விடுகிறோம். உண்மையில் அப்படியோர் ஆண் இல்லையா என்று கேட்டால், இருக்கிறார்கள். ஆனால், எத்தனை என்பதுதான் வாதம். அப்படிப்பட்ட ஆண்களை (7ஆம் பக்கம் பார்க்க...)




# சாண்டோரினி தீவில் நிலநடுக்கம்- அவசர நிலை அறிவிப்பு!

ஐரோப்பாவின் தென்கிழக்கே உள்ள கிரீஸ் நாட்டின் சாண்டோரினி தீவில் திடீரென நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

புதன்கிழமை இரவு ஏற்பட்ட இந்த நிலநடுக்கமானது ரிக்டர் அளவில் 5.2ஆக பதிவான நிலையில் நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் தொடர்பில் இதுவரையில் தகவல் வெளியாகவில்லை.

கடந்த ஒரு வாரத்திற்குள் 7,700 நிலநடுக்கள் ஏற்பட்டுள்ளதாக கூறப்படும் அதேவேளை , புதன்கிழமை இரவு பதிவான நிலநடுக்கமே சக்திவாய்ந்த நிலநடுக்கமாக கருதப்படுகிறது.

நிலநடுக்கத்தால் கட்டிடங்கள் அதிர்ந்ததைத்தொடர்ந்து , அவசர நிலை பிரகடனம் படுத்தப்பட்டது. இந்த அவசர நிலையானது மார்ச் 3-ஆம் திகதி வரை அமுலில் இருக்கும் என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதை தொடர்ந்து சாண்டோரினி தீவிலிருந்து 11 ஆயிரம் பேர் வெளியேறிவிட்டனர். சுமார் 7ஆயிரம் பேர் படகு மூலமாகவும், 4ஆயிரம் பேர் விமானம் மூலமாகவும் புறப்பட்டனர்.


# போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறி லெபனானை தாக்கிய இஸ்ரேல்!



ஹிஸ்புல்லாவுக்கு சொந்தமான லெபனானின் இரண்டு ஆயுத கூடங்களில் தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது. போர் நிறுத்த ஒப்பந்தம் அமலில் உள்ள நிலையில், இந்த தாக்குதல் நடத்தப்பட்டு இருப்பது குறிப்பிடத்தக்கது.

லெபனான் எல்லைக்கு உட்பட்ட இரண்டு ஆயுத கிடங்குகளில் ஹிஸ்புல்லாவுக்கு சொந்தமான ஆயுதங்கள் இருந்ததாக குற்றம்சாட்டிய இஸ்ரேல் அவற்றை துல்லியமாக தாக்கியதாக இஸ்ரேல் இராணுவம் சமூக வலைதளங்களில் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் 27-ஆம்திகதி முதல் இஸ்ரேல் மற்றும் ஹிஸ்புல்லா இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தம் அமுலில் உள்ளது. இந்த நிலையில் தான் இஸ்ரேல் லெபனான் மீது தாக்குதல் நடத்தியுள்ளது. இந்த விவகாரத்தில் இருதரப்பும் மாறி மாறி குற்றச்சாட்டுகளை முன்வைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



BREAKING: US plane, carrying 10, disappears from radar near Alaska's Nome

# திடீரென மாயமான பயணிகளுடன் சென்ற அமெரிக்க விமானம்!

அமெரிக்காவின் அலாஸ்கா மாநிலத்திற்கு அருகே பத்து பேருடன் சென்ற விமானம் காணாமல் போயுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பெரிங் ஏர் 445 ரக விமானம் நேற்று (06) பிற்பகல் பெரிங் கடலுக்கு மேலே நோம் நகரத்திற்கு செல்லும் பாதையில் பறந்து கொண்டிருந்தபோது இவ்வாறு காணாமல் போய் உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காணாமல் போன விமானத்தில் 9 பயணிகள் மற்றும் 1 விமானி உட்பட 10 பேர் பயணம் செய்ததாக விமான நிறுவனம் வெளியிட்டுள்ள அறிவிப்பில் தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் காணாமல் போன விமானத்தை தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு தடை விதித்து அதிபர் டிரம்ப் உத்தரவு!



சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தின் மீது தடை விதிக்கும் நிர்வாக உத்தரவில் அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் கையெழுத்திட்டார். இதனை வெள்ளை மாளிகை அதிகாரப்பூர்வமாக அறிவித்து இருக்கிறது. கடந்த மாதம் அமெரிக்க அதிபராக இரண்டாவது முறையாக பதவியேற்றதில் இருந்து டிரம்ப் பல்வேறு நடவடிக்கைகளை தொடர்ச்சியாக எடுத்து வருகிறார்.

அந்த வரிசையில் தான் தற்போது சர்வதேச நீதிமன்றத்திற்கு தடை விதிக்க அவர் உத்தரவிட்டுள்ளார். அமெரிக்கா மற்றும் அதன் நட்பு நாடான இஸ்ரேலை குறிவைத்து தொடர் விசாரணைகளை நடத்தி வருவதாக அமெரிக்கா குற்றம்சாட்டியுள்ளது.

இதைத்தொடர்ந்து , இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகுவுக்கு கைது செய்ய உத்தரவு பிறப்பித்து இருப்பதன் மூலம் தனது அதிகாரத்தை நீதிமன்றம் துஷ்பிரயோகம் செய்துள்ளதாக தெரிவித்துள்ளது. முன்னதாக பெஞ்சமின் நேதன்யாகு அமெரிக்காவில் வைத்து அதிபர் டிரம்ப்-ஐ சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

அமெரிக்காவின் புதிய உத்தரவு காரணமாக சர்வதேச குற்றவியல் நீதிமன்ற அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நீதிமன்றத்தின் விசாரணைகளுக்கு உதவியதாகக் கருதப்படும் எவருக்கும் எதிராக சொத்து முடக்கம் மற்றும் பயணத் தடைகள் பிறப்பித்துள்ளது.

பெஞ்சமின் நேதன்யாகு அமெரிக்காவின் வெள்ளை மாளிகை வருகைக்குப் பிறகு இந்த தடை உத்தரவுகள் வெளியாகி உள்ளன. இவை வெளிப்படையாகவே அமெரிக்கா – இஸ்ரேல் இடையிலான நட்புறவை வெளிப்படுத்தும் வகையில் அமைந்துள்ளன. முன்னதாக காசாவை கையகப்படுத்தி பாலஸ்தீனியர்களை மத்திய கிழக்கு நாடுகளுக்கு அனுப்ப திட்டம்கொண்டிருப்பதாக அதிபர் டிரம்ப் அறிவித்து இருந்தார். அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் நீதிமன்றத்தின் உறுப்பினர்கள் அல்ல. இது குறித்து சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் தரப்பில் இதுவரை எந்த கருத்தும் தெரிவிக்கப்படவில்லை.

# தூக்கில் தொங்கிய நிலையில் குடும்பஸ்தர் ஒருவரின் சடலம்

நுவரெலியா, பெப். 7

நுவரெலியா, பீட்ரோ தோட்டத்தில் குடும்பஸ்தர் ஒருவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நேற்று இரவு 11 மணியளவில் இரண்டு பெண் பிள்ளைகளின் தந்தையான சிங்காரம் சந்திரமோகன் என்பவரே பீட்ரோ தமிழ் மகா வித்தியாலயத்தின் அருகில் உள்ள மரம் ஒன்றில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை நுவரெலியா பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

## மார்ச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் படகு சேவைகள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இன்றைய கூட்டத்தில் விரிவாக ஆராயப்பட்டன.

இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குப் பிரதேச செயலக அதிகாரிகள் மற்றும் பாதுகாப்புத் தரப்பினர் உள்ளிட்ட அதிகாரிகள் தயாராகியுள்ளனர்.

விசேட பஸ்சேவையை முன்னெடுக்க இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ்களும் சேவையில் ஈடுபடுவது தொடர்பில் அவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அதேவேளை, படகு சேவையில் ஈடுபடவுள்ள படகுகளின் தரம் தொடர்பில் கடற்படையினர் ஆய்வுகளை மேற்கொண்டு அதற்கான அனுமதிகள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் நெடுந்தீவில் இருந்து கச்சதீவுக்கான ஒரு வழி கடற்போக்குவரத்துக் கட்டணமாக 1000 ரூபாவும், குறிகாட்டுவன் துறைமுகத்தில் இருந்து 1300 ரூபாவாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கச்சதீவுக்கு வருகை தரும் யாத்திரிகர்களுக்கு உணவு வழங்குவதற்கான ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இம்முறை இந்தியாவில் இருந்து 4 ஆயிரம் யாத்திரிகர்களும், இலங்கையில் இருந்து 4 ஆயிரம் யாத்திரிகர்களும் அனுமதிக்கப்படவுள்ளனர்.

இரண்டு நாடுகளினதும் அதிகாரிகள் மற்றும் சேவையாளர்கள் என ஆயிரம் பேருமாக சுமார் 9 ஆயிரம் பேர் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இம்முறை பெருந்திருவிழாவுக்கு வருகை தரவுள்ளவர்கள் ஏற்பாட்டாளர்களால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி எதுவித இடையூறுகளும் இன்றி கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்." - என்றார்.

## யாழ்.மாவட்ட

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்புக் குழுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துக் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஆலயங்கள் மற்றும் வேறு நிகழ்வுகளில் பயன்படுத்தப்படும் ஒலிபெருக்கிகளால் அசௌகரியங்கள் ஏற்படுவதாக எமக்குத் தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்று வருகின்றன.

அதனால் ஆலயங்களில் ஒலிபெருக்கிகளைப் பயன்படுத்தும்போது, மாணவர்கள் மற்றும் வயோதிபர்களுக்கு இடையூறு ஏற்படாத வண்ணம் பயன்படுத்த வேண்டும்.

குறிப்பாக இரவு வேளைகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இந்த ஒலிபெருக்கி மூலம் இடையூறு ஏற்படுவதை நாங்கள் அறிந்திருக கின்றோம். ஆகவே, இதற்கு எதிராக நாங்கள் சட்ட நடவடிக்கை எடுக்கவுளளோம். இது குறித்து எழுத்து மூலம் பொலிஸாருக்கும் அறிவித்துள்ளோம்.

இவ்வாறு அசௌகரியங்கள் ஏற்படும் பட்சத்தில், அது தொடர்பில் முறைப்பாடுகளைப் பிரதேச செயலகங்களுக்கு அறிவித்தால், பிரதேச செயலர்கள் உடனடியாகப் பொலிஸாரின் கவனத்துக்குக் கொண்டு வந்து அந்த ஒலியின் அளவைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள்." - என்றார்.

யாழ்ப்பாணத்தில் தற்போது ஆலயத் திருவிழாக் காலங்கள் ஆரம்பமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கம்ப....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவர் துப்பாக்கிச்சூட்டை மேற்கொண்டுவிட்டு தப்பிச் சென்றுள்ளனர் என்று பொலிஸ் விசாரணையின்போது தெரியவந்துள்ளது.

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்த வேளை பஸ் மோதியுள்ளது.

இந்த விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைக் கொழும்பு கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்

## மொட்டுக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி. தெரிவித்தார்.

சமகால அரசியல் நிலவரம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவிக்கையில், "அனைவருக்கும் அரசியல் செய்யும் உரிமை இருக்கின்றது. அந்தவகையில் மொட்டுக் கட்சி செயற்படுகின்றது. அவர்களின் நடவடிக்கை எமக்குச் சவால் கிடையாது.

ஐக்கிய மக்கள் சக்தி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி இணைவதையே கட்சி ஆதரவாளர்கள் விரும்புகின்றனர். சிலர் எதிர்த்த போதிலும், பெரும்பாலானவர்கள் ஆதரவு நிலைப்பாட்டிலேயே உள்ளனர். ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைப் பதவியில் எவ்வித மாற்றமும் வராது. சஜித் பிரேமதாஸவே தலைவர். அவருக்கே மக்கள் ஆதரவு உள்ளது.

அதேவேளை, உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்தி, குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கப்பட வேண்டும்." - என்றார்.

## ரஷ்ய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரஷ்ய இராணுவத்தில் 554 இலங்கையர்கள் இணைந்துள்ளதாகவும், அவர்களில் யாரும் வலுக்கட்டாயமாக ஆட்சேர்ப்பு செய்யப்படவில்லை என்று தெரியவந்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார். அவர்களை விடுவித்து, நாட்டுக்கு மீள கொண்டுவருவதற்குரிய முயற்சி இடம்பெற்று வருகின்றது என்றும் வெளிவிவகார அமைச்சர் மேலும் கூறினார்.

# யாழ். பல்கலையில் தேசியக்கொடியை அவமதித்து கறுப்புக்கொடி ஏற்றியவர்களை உடன் கைது செய்க

## முன்னாள் அமைச்சர் வீரசேகர வலியுறுத்து

கொழும்பு, பெப். 7

இலங்கையின் சுதந்திர தினத்தன்று யாழ். பல்கலைக்கழகத்தில் தேசியக்கொடியைக் கீழிறக்கிக் கறுப்புக்கொடியை ஏற்றியவர்கள் கைதுசெய்யப்பட வேண்டும்எனவும், அவர்களுக்குப்புலிகள் அமைப்புடன் தொடர்புள்ளதா என்பது பற்றி விசாரிக்கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியுள்ளார் முன்னாள் அமைச்சர் சரத் வீரசேகர.

அத்துடன், இந்தச் சம்பவம் தொடர்பில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தரிடமும் விளக்கம் கோரப்பட வேண்டும்எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவர் மேலும் கூறியதாவது:-

"இலங்கையின் சுதந்திர தினத்தன்று யாழ். பல்கலைக்கழகத்தில் தேசியக் கொடி இறக்கப்பட்டு, அதற்குப் பதிலாக கறுப்புப் கொடி ஏற்றப்பட்டுள்ளது. தமிழ் நாளிதழ்களில் இது தொடர்பான செய்தி முதல்பக்கத்தில் வெளிவந்துள்ளது.

சுதந்திர தினத்தன்று தேசியக்கொடி ஏற்றப்பட வேண்டிய பல்கலைக்கழகத்தின் பிரதான கம்பத்தில் இருந்த கொடியே கீழ் இறக்கப்பட்டு, கறுப்புக்கொடி ஏற்றப்பட்டுள்ளது.

போரில் இருந்து இந்த நாட்டுக்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்த இராணுவத்தை அவமதிக்கும் வகையிலேயே இவ்வாறு செயற்பட்டுள்ளனர்.

எனவே, இவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு, தண்டனை பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.

இதற்கு இடமளித்தமை குறித்து யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர், பேராசிரியர் குழாமும் பொறுப்புக்கூற வேண்டும். இது தொடர்பில் அவர்களிடம் விளக்கம் கோரப்பட வேண்டும்.

யாழ். பல்கலைக்கழகமும் மக்கள் வரிப்பணத்தில்தான் இயங்குகின்றது. எனவே, தேசியக்கொடி அவமதிக்கப்பட்டுள்ளமை ஏற்றுக்கொள்ள முடியாத செயலாகும். இந்தச் செயலில் ஈடுபட்டவர்களைக்கைது செய்யுமாறு கோரு கின்றோம்.

சுதந்திர தினத்துக்கு முன்னதாக ஜனாதிபதி யாழ். சென்றார், மக்களுடன் கலந்துரையாடினார். இனவாதத்தைத் தூண்டுபவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெளிவாக அறிவித்திருந்தார். எனவே, தேசியக் கொடியை அவமதித்து, தென்னிலங்கையில் இனவாதத்தைத் தூண்டும் வகையில் செயற்பட்டுள்ள நபர்களுக்கு எதிராக முதலில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

எமது நாட்டின் தேசியக்கொடியை ஏற்க மறுப்பவர்களைத் தேசத்துரோகிகளாகவே கருத வேண்டும். இவர்களுக்குப் புலிகள் அமைப்புடன் தொடர்புள்ளதா என்பது பற்றி புலனாய்வுப் பிரிவு ஆராய வேண்டும்." - என்றார்

# திருமணத்தின் பெயரில்.....

(5ஆம் பக்கத் தொடர்ச்சி...)

விரல்விட்டு எண்ணி விடலாம். எண்ணிக்கையில் எத்தனை ஆண்கள் இருந்தாலும் அவர்களைவிடக் குறைந்தது பத்து மடங்கு பெண்கள், பாதிக்கப்பட்ட ஆண்களையும், அவர்கள் குடும்பத்தையும் தினமும் தூக்கிச் சுமக்கின்றனர்.

இதில் வேதனைக்குரியது என்னவென்றால், ஆண்களுக்குக் குறைபாடிருப்பதை மறைத்து திருமணம் செய்து வைப்பது. திருமணத்திற்குப் பிறகு ஆணுக்கிருக்கும் குறை தெரியவந்தால் அதை ஏற்றுக் கொள்ளச் சொல்லி பெண்ணைச் சமூகமும் குடும்பமும் வற்புறுத்தும். இதுவே ஒரு பெண்ணிற்குக் குறையிருப்பதை மறைத்து திருமணம் செய்து வைத்தப்பிறகு அக்குறைத் தெரியவந்தால், அப்பெண்ணை ஏற்றுக் கொள்ளச் சொல்லி சம்மந்தப்பட்ட ஆணை இச்சமூகம் வற்புறுத்துமா? நிச்சயமாக இல்லை. இங்கு உறவுகளுக்குள் நடக்கும் திருமணமும் விதிவிலக்கல்ல. பொறுப்பற்றுச் சுற்றும் ஆணைத் தெரிந்தே தன் மகளுக்குத் திருமணம் செய்து வைக்கும் பெற்றோரையும் கடந்துதான் வந்திருக்கிறோம். கேட்டால், "கல்யாணம் ஆனால் சரி ஆகிவிடுவான். நீ அவனை மாற்றி விடுவாய் " போன்ற இனிப்பு தடவிய வார்த்தைகளை சொல்வார்கள். உளவியல் ரீதியாக திருமணத்திற்குப் பின் அதிகம் பாதிக்கப்படுவது பெண்கள்தான்.

விட்டுக்கொடுத்தல், பொறுமை, சகிப்புத்தன்மை, அன்பு, தியாகம் போன்ற வார்த்தைகள் எல்லாம் பெண்களின் கடிவாளம். சுயநலத்தின் பேரில் நடக்கும் சுரண்டல்களைப் பெரிதும் எதிர்கொள்வது பெண்கள்தான். சில மரபணுக் குறைபாடுகள் ஒரு தலைமுறையில் இருந்து அடுத்த தலைமுறைக்கு நிச்சயம் கடத்தப்படக் கூடியவை. அதுபோன்ற குறைபாடுகளால் பாதிக்கப்பட்டவர்களின் அறியாமையும் அலட்சியமும் பெண்ணை மட்டுமல்ல அடுத்த தலைமுறையையும் பாதிக்கும். எல்லா மரபணுக் குறைபாடுகளும் கட்டாயம் அடுத்த தலைமுறையைப் பாதிக்கும் என்று சொல்லிவிட முடியாது. ஆனால், ஏற்கெனவே இணையரின் பராமரிப்பிலும் சிகிச்சையிலும் பெரும்பான்மையான நேரத்தைச் செலவிடும் ஒரு பெண்ணிற்கு, பிறக்கும் குழந்தையும் குறைபாடுடன் பிறந்தால், அவள் மனநிலை என்னவாக இருக்கும்? உளவியல் ரீதியாக எவ்வளவு பாதிப்பை அது ஏற்படுத்தும்? தொடர் சோர்வு, மன அழுத்தம் எல்லாம் அவளை உடல் மற்றும் மனதளவில் பலவீனப்படுத்திவிடும்.

குறைபாடுடையவர்கள் திருமணமே செய்து கொள்ளக் கூடாதா என்று கேட்டால், நிச்சயமாகத் திருமணம் செய்து கொள்ளலாம். ஆனால், அந்தத் திருமணத்திற்குப் பின்பான வாழ்வியல் மாற்றத்தையும், வருங்காலத் தலைமுறையின் ஆரோக்கியத்தையும் பற்றிய புரிதலோடு திருமணங்கள் நிச்சயிக்கப்பட வேண்டும். பாலினத்தின் அடிப்படையில் நடக்கும் உழைப்புச் சுரண்டலைத் திருமணத்தின் பெயரில் அனுமதிப்பது எந்த வகையிலும் நியாயமானதாக இருக்காது. கொஞ்சம் விழிப்புணர்வும் பரந்த மனப்பான்மையும் வீட்டிலிருந்து தொடங்க வேண்டும்.







இந்நாளிதழ் நல்லூர், இல - 68, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 07.02.2025 இல் வெளியிடப்பெற்றது.